**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**MCOP No.147/2024**

**ம.சா. 2**

நாள்: 06.11.2025 .

2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 06 ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தனம் | ஜாதி | |
| கணவர் பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

முதன்மை விசாரணை:

நான் இம்மனுவில் மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் பயணம் செய்த வாகனம் ஆனது சரக்கு வாகனம் என்றால் சரியல்ல. ஆட்களை ஏற்றிக்கொண்டு செல்லும் வாகனம். அந்த வாகனம் டாடா ஏஸ் வாகனம் என்றால் குட்டியானை வாகனம். மேற்படி வாகனம் பொருட்களை ஏற்றிக்கொண்டு செல்வதற்கான வாகனம்தான் என்றால் அதில் பொருட்களை ஏற்றிக்கொண்டு நாங்களும் போவோம். விபத்து நடந்த சமயம் அந்த வாகனத்தில் 7 நபர்கள் பயணம் செய்தோம். டாடா ஏஸ் வாகனம் பொருட்களை மட்டும்



MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.06 17:24:31 +0530

ஏற்றிக்கொண்டும், முன்பகுதியில் இரண்டு நபர்கள் மட்டும் ஏறி பயணம் செய்யும் வாகனம் என்றும், ஆனால் நாங்கள் விதிமுறைகளை மீறி 7 நபர்கள் வாகனத்தின் பின்பகுதியில் பயணம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி வாகனத்தில் விதிமுறைகளை மீறி நாங்கள் பயணம் செய்து விபத்து ஏற்பட்டது என்பதால், 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்திசையில் வந்த பொலிரோ சரக்கு வாகனத்தின் கவனக்குறைவால்தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி பொலிரோ வாகனத்தின் ஓட்டுநர் மீதுதான் முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரிதான்.

நாங்கள் சென்று வாகனத்தின் ஓட்டுநர் சரியான சாலைவிதிகளை பின்பற்றி, முறையாக ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். அதனால் 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்படவில்லை என்றாலும், 2ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றாலும் எனக்குத் தெரியாது. 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நாங்கள் தனுஷ்கோடி அரிச்சல்முனையில் இருந்து கிளம்பி, புதுரோட்டிற்கு வந்தோம். நாங்கள் வந்த வாகனம் டாடா ஏஸ் குட்டியானை வாகனம் என்றால் சரிதான். என்னுடன் விபத்தில் இறந்துபோன முனியசாமி, அவரது அப்பா தரைக்குடியான், செல்வி, உமாகணேஷ், வசந்தா, உமையேஸ்வரி மற்றும் ஓட்டுநர் ஆகியோர் சேர்ந்து பயணம் செய்தோம் என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் மேற்படி வாகனத்தின் பின்பக்கத்தில் Doorல் அமர்ந்து பயணம் செய்தோம் என்றால் இல்லை, பின்பக்கம் உள்ளே அமர்ந்து பயணம் செய்தோம். வாகனத்தை ஓட்டுநர் வேகமாக ஓட்டி சென்றார் என்றால் சரியல்ல. எங்கள் எதிரில் வந்த வாகனம் பொலிரோ சரக்குகள் ஏற்றும் வாகனம் என்றால்



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.06 17:24:34 +0530

சரிதான். அந்த வண்டிகளில் சரக்குகள் மட்டும்தான் ஏற்றுப்போக வேண்டும் என்றால் எங்களையும் ஏற்றிக்கொண்டு போவார்கள். நாங்கள் தினமும் அந்த வாகனத்தில்தான் ஏறி செல்வோம்.

எதிரில் வந்த வாகனம் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்தது என்றால் ஆமாம். மேற்படி வாகனம் மோதுவது போல் வந்ததும், நாங்கள் கீழே குதித்துவிட்டோம் என்றால் என்றால் இல்லை. எங்கள் வாகனத்தின் மீது மோதியதால் நாங்கள் கீழே சாய்ந்துவிட்டோம். எதிரில் வந்த வாகனத்திற்கு எந்த சேதமும் இல்லை என்றால் நான் மயங்கிவிட்டதால் எனக்குத் தெரியாது.

நாங்கள் வாகனத்தின் பின்னால் உட்கார்ந்து இருந்ததால், எதிரில் வந்த வாகனம் எவ்வாறு வந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் இரண்டு வாகனங்களும் மோதிக்கொண்டது தெரியும். வேறு எதுவும் தெரியாது.

இந்த விபத்திற்கு நாங்கள் பயணம் செய்த வாகனத்தில் அதிக ஆட்களை ஏற்றிக்கொண்டு சென்றதும், அஜாக்கிரதையாகவும், அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிச்சென்றதுதான் காரணம் என்றால் சரியல்ல. தெரிந்தே சரக்கு வாகனத்தில் பயணம் செய்து, வழிந்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டதால், மனுதாரர்களுக்கு இழப்பீடு எதுவும் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் மனுதாரரின் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2025.11.06 17:24:37 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .